
பக்கங்கள் 16+ 02

# மாலை முரசு

முழக்கம்: 03 | வள்ளுவ ஆண்டு 2057 | ஐப்பசி 15 சனிக்கிழமை 01.11.2025 | அதிர்வு 94

## போதைப்பொருள் சுற்றிவளைப்பில் 1,076 பேர் சிக்கினர்!



நாடளாவிய ரீதியில் நேற்று வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்ட "முழு நாடுமே ஒன்றாக" 03

'கனடா முரசு' இணைக்கப்பட்டுள்ளது

இங்கே CLICK செய்யவும்






# உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறத் தயாராகும் சந்திரிகா!

### முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அநீதி இழைப்பு என்று அவர் விசனம்

முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க, கொழும்பு - சுதந்திர வீதியில் உள்ள தனது உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து தனது உடமைகளை வெளியேற்றும் நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளார். 03



# ரணிலும் சஜித்தும் ஒரணியில் திரண்டால் முதல்வர் வேட்பாளராகக் களமிறங்குவேன்

## மரிக்கார் எம்.பி. அதிரடி அறிவிப்பு



ஐக்கிய மக்கள் சக்தியும், ஐக்கிய தேசியக் கட்சியும் ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட முன்வந்தால் மாகாண சபைத் தேர்தலில் முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவதற்குத் தயார் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் தெரிவித்தார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடுவதற்கு நான் தீர்மானம் எடுக்கவில்லை. எனினும், 03



# தமிழ் - முஸ்லிம் நட்புறவைக் கட்டியெழுப்பும் கலந்துரையாடல் இன்று யாழ்ப்பாணத்தில்

(எஸ்.நிதர்ஷன்)

வடக்கு – கிழக்கில் தமிழ் மற்றும் முஸ்லிம் மக்களுக்கிடையில் நட்புறவை கட்டியெழுப்பும் கலந்துரையாடல் இன்று சனிக்கிழமை யாழ் தந்தை செல்வா கலையரங்கத்தில் வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாட்டில் இடம்பெற்றது. வடக்கில் முஸ்லிம் மக்கள் வெளியேற்றப்பட்டு 35 வருட நிறைவை நினைவுகூரும் முகமாக இந்தக் கலந்துரையாடல் இடம்பெற்றது.

வடக்கில் இருந்து வெளியேற்ற முஸ்லிம்கள் மீண்டும் தமது பிரதேசங்களில் மீள் குடியேற்றப்பட வேண்டும், தமிழ் – முஸ்லிம் மக்களிடம் நல்லதொரு உறவுப் பாலத்தை கட்டியெழுப்புவதற்கு முஸ்லிம் மக்கள் தயாராக இருக்கின்ற நிலையில் இரு தரப்பினரும் உறவை வளர்துக்கொள்ள இதய சுத்தியுடன் முன்வர வேண்டும் என்ற அடிப்படையில் இந்தக் கலந்துரையாடல் முன்னெடுக்கப்பட்டது.











# ஐ.எம்.எவ்வைத் திருப்திப்படுத்தக்கூடிய 'பட்ஜட்'டையே அரசு முன்வைக்கக்கூடும்

## ஐக்கிய மக்கள் சக்தி சந்தேகம்

சர்வதேச நாணய நிதியத்தை திருப்திப்படுத்தக்கூடிய வரவு – செலவுத் திட்டத்தையே அரசு முன்வைக்கக்கூடும் என்று பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தி தெரிவித்தது.

தேசிய மக்கள் சக்தியின் 2ஆவது வரவு– செலவுத் திட்டம் எதிர்வரும் 7 ஆம் திகதி நாடாளுமன்றத்தில் முன்வைக்கப்படவுள்ள நிலையிலேயே ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.எம். மரிக்கார் மேற்கண்டவாறு




சுட்டிக்காட்டினார்.

இது தொடர்பில் ஊடகங்களிடம் அவர் மேலும் கூறுகையில்,

"மாகாண சபைத் தேர்தலை இலக்கு வைத்து வரி குறைப்பு செய்வதற்கு முன்னதாக அரசு திட்டமிட்டிருந்தது. எனினும், கூட்டுறவுத் தேர்தல்களில் தோல்வி ஏற்படுவதால் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு அஞ்சுகின்றது.

எனவே, சர்வதேச நாணய நிதியத்தைத் திருப்திப்படுத்தும் பாதீடே முன்வைக்கப்படக்கூடும். அதேவேளை, மாகாண சபைத் தேர்தலை நடத்துமாறு அரசுக்குச் சவால் விடுக்கின்றோம்." – என்றார்.

# பெண் ஒருவர் கொடூரப் படுகொலை!

பெண் ஒருவர் கல்லால் தாக்கப்பட்டுக் கொடூரமாகப் படுகொலை செய்யப்பட்டுள்ளார். இந்தச் சம்பவம் காலி, அஹுங்கல்ல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பாதேகம பிரதேசத்தில் நேற்று வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது.

அஹுங்கல்ல, பாதேகம பிரதேசத்தைச் சேர்ந்த 43 வயது பெண்ணே கொலை செய்யப்பட்டுள்ளார். இந்தப் பெண்ணுக்கும் அவரது உறவினர் ஒருவருக்கும் இடையில் ஏற்பட்ட தனிப்பட்ட தகராறு காரணமாகக் கொலைச் சம்பவம் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸ் விசாரணையில் தெரிய வந்துள்ளது.

சந்தேகநபரான உறவினர் பிரதேசத்தை விட்டுத் தப்பிச் சென்று தலைமறைவாகியுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை அஹுங்கல்ல பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## உத்தியோகபூர்வ...



(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகளை இரத்துச் செய்வதற்கான சட்டம் அண்மையில் நாடாளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டதைத் தொடர்ந்து, அவர்கள் அரசால் வழங்கப்பட்ட உத்தியோகபூர்வ வதிவிடங்களை விட்டு வெளியேற வேண்டியுள்ளது.

உடல்நலக் குறைவு காரணமாக உத்தியோகபூர்வ இல்லத்திலிருந்து வெளியேறுவதற்குக் கால அவகாசம் வழங்கப்பட்டிருந்தது. அதற்கமைய அவர் வீட்டில் இருந்து வெளியேறுவதற்கான நடவடிக்கைகளைத் தற்போது முன்னெடுத்திகுள்ளார்.

அடுத்த சில நாட்களுக்குள் அவர் அந்த வதிவிடத்திலிருந்து முழுமையாக வெளியேறிவிடுவார் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

முன்னாள் ஜனாதிபதிகளுக்கு வழங்கப்பட்ட சிறப்புரிமைகளை இந்த அரசு இரத்துச் செய்தமையின் ஊடாக முன்னாள் ஜனாதிபதிகளுக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்று முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்க விசனம் தெரிவித்துள்ளார்.

## ரணிலும்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஐக்கிய தேசியக் கட்சி, ஐக்கிய மக்கள் சக்தி என்பன ஒரே மேடைக்கு வந்து, ஒரே சின்னத்தின் கீழ் போட்டியிட்டால், தேர்தலில் களமிறங்குமாறு கட்சி கோரிக்கை விடுத்தால் , எனக்கு வாக்களித்த மக்கள் கேட்டுக்கொண்டால் தேர்தலில் போட்டியிட நான் தயார்.

நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் துறந்துவிட்டு, முதலமைச்சர் வேட்பாளராகக் களமிறங்குவதற்கு நான் தயார். கட்சி கோரிக்கை விடுக்காவிட்டால் போட்டியிட மாட்டேன். அதேபோல் இரு தரப்பும் இணையாவிட்டாலும் களமிறங்கமாட்டேன்." – என்றார்.

## போதைப்பொருள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்ற தேசிய செயற்பாட்டின் போதைப் பொருள் சுற்றிவளைப்பின் போது 1076 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் எஃப்.யு. வுட்லர் இன்று ஊடகங்களிடம் தெரிவித்தார்.

இதன்போது, ஹெரோயின் போதைப் பொருளுடன் 407 பேரும், ஐஸ் போதைப் பொருளுடன் 354 பேரும், ஹேஷ் போதைப்பொருளுடன் 43 பேரும், கஞ்சா போதைப்பொருளுடன் 268 பேரும், போதை மாத்திரைகளுடன் 41 பேரும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களில் 20 பேர் புனர்வாழ்வு நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப் பரிந்துரைக்கப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் கூறினார்.





# தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் இளம் தலைவர்கள் யாழ்ப்பாணத்துக்குக் கள விஜயம்

(எஸ்.நிதர்ஷன்)

இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அழைப்பின் பேரில் தென்னிலங்கையைச் சேர்ந்த அரசியல் கட்சிகளின் இளம் தலைவர்கள் இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டனர்.

அண்மையில் 14 அரசியல் கட்சிகளைப் பிரதிநிதித்துவப்படுத்தும் 24 பேர் கொண்ட இளம் அரசியல் தலை வர்கள் குழு இந்தியாவுக்கு விஜயம் செய்ததன் தொடர்ச்சியாக வடக்கு மாகாண விஜயம் அமைந்துள்ளது.

இந்த விஜயத்தின் போது வடக்கு மாகாண மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பில் கள விஜயங்கள் மேற்கொண்டு இளம் அரசியல் தலை வர்களுக்குத் தெளிவுபடுத்தப்பட்டது.


















# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்

259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com


## நடந்தவற்றை மறக்கலாமா?

“இந்த அரசு மூன்றிலிரண்டு பங்கு பெரும்பான்மை பலம் மிக்க மக்கள் ஆணையுடன் தெரிவு செய்யப்பட்டது. எனவே, கூட்டு எதிரணியினரின் பேரணி ஊடாக இந்த அரசைக் கவிழ்க்க முடியாது. இதை எதிரணியினர் உணர்ந்து கொள்ள வேண்டும்” - என அமைச்சர் கே.டி. லால்காந்த தெரிவித்திருக்கின்றார்.

தேசிய மக்கள் சக்தி அரசுக்கு எதிராக எதிர்வரும் 21 ஆம் திகதி கூட்டு எதிரணியினர் நுகேகொடையில் நடத்தத் திட்டமிட்டிருக்கும் பேரணி தொடர்பிலேயே இந்தக் கருத்தை அமைச்சர் லால் காந்த தெரிவித்திருக்கிறார்.

அரை நூற்றாண்டுக்கு மேல் அரசியல் செய்து, இரண்டு ஆயுதப் புரட்சிகளை முன்னெடுத்தும் பலன் அளிக்காத முயற்சி, அதன் பின்னர் எவ்வாறு பலனளித்துத் தாங்கள் அதிகாரத்துக்கு வந்தார்கள் என்பதை தேசிய மக்கள் சக்தியின் மூத்த அரசியல் தலைவரான லால் காந்தா மறந்து போனமையின் வெளிப்பாடு தான் இந்தக் கருத்து வெளிப்பாடு என்று தோன்றுகின்றது.

கடந்த ஐந்து ஆண்டு கால அரசியலைக் கூட அவர் பொருட்படுத்தாமல் கருத்து கூறுகின்றார் என்றே தோன்றுகின்றது.

ஏறத்தாழ இந்த அரசு போல அதிகாரத்துக்கு வந்ததுதான் கோட்டாபய ராஜபக்ஷவின் அதிகார பீடம். ஒரு வகையில் பார்த்தால் தற்போதைய ஜனாதிபதி அநுரகுமார திஸநாயக்கவை விட மிக வலிமையான மக்கள் ஆதரவோடு ஆட்சியைக் கைப்பற்றியவர் கோட்டாபய. அநுரகுமார திஸநாயக்கவைப் போல ஜனாதிபதித் தேர்தலில் இரண்டாவது சுற்று வாக்கெடுப்பில் வென்றவர் அல்லர் அவர். முதல் சுற்றிலேயே நாட்டின் வரலாற்றில் ஆகக்கூடியதாக 69 லட்சத்துக்கும் அதிக வாக்குகளை எடுத்து ஆட்சியை வென்ற அவருக்கும், ஏறத்தாழ இதே தேசிய மக்கள் சக்திக்கு வழங்கியது போல நூற்றியைம்பதுக்கு மேற்பட்ட எம்.பிக்களின் ஆதரவை மக்கள் வழங்கி இருந் தார்கள்.

ஆனால் அந்த அதிகாரத்தை இரண்டரை வருடங்களுக்குள் மக்கள் எப்படி பிடுங்கினார்கள் என்பதை அமைச்சர் லால் காந்தா மறந்து விட்டாரா என்ற கேள்வி எழுகின்றது.

இப்போது எதிர்க்கட்சி அழைப்பு விடுத்தது போல மக்களைப் பேரணியில் செல்வதற்கு கூட அப்போது அழைப்பு விடுக்கப்படவில்லை. மக்கள் காலி முகத்திடலில் வெறுமனே ஒன்றுகூடியே எதிர்ப்புத் தெரிவித்து, பெரும் பிரளயமாக உருவெடுத்து, கோட்டாவையும் அவரது அரசையும் அதிகாரத்திலிருந்து துரத்தினார்கள் என்பதும், அந்த முயற்சியில் லால காந்தா தரப்புக் கட்சியினரின் பங்களிப்பு கணிசமாக இருந்தது என்பதையும் மறந்து விட முடியாது. ஆகையினால் நடந்தவற்றை அவர் மறந்துவிட்டார் என்று கருதுவதற்கு இடமில்லை.

மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மை அல்ல, அதிலும் விட அதிக பெரும்பான்மையோடு அதிகாரத்துக்கு வந்தாலும் கூட, மக்கள் எதிர்ப்பு ஒன்று திரண்டால் ஆட்சியாளர்கள் விரட்டப்படுவார்கள் என்பதுதான் ‘அறகலய’ நமக்குப் போதிக்கும் அரசியல் உள் சூத்திரம்.

ஆகவே மூன்றில் இரண்டு பங்கு பெரும்பான்மையோடு அதிகாரத்துக்கு வந்த அரசை வீழ்த்த முடியாது என்ற அரசியல் திமிரில் அமைச்சர் லால் காந்தாவும் அவரது ஆட்சித் தரப்பினரும் நடந்து கொள்வார்களாயின் கோட்டாவின் அரசுக்கு ஏற்பட்ட கதி அவர்களுக்கும் ஏற்பட காலம் செல்லாது என்பதை அவரும் அவரது தரப்பினரும் நேரத்தோடு உணர்ந்து கொள்வது நல்லது.




# மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலை அணியின் பத்தாவது ஒன்றுகூடல்!

**(வி.ரி. சகாதேவராஜா)**

மட்டக்களப்பு ஆசிரிய கலாசாலையின் 91 - 92 ஆண்டு புலன அணியினரின் பத்தாவது ஒன்று கூடலும் , மணி விழா கொண்டாட்டமும் திருகோணமலையில் இரு தினங்களாக நடைபெற்றது.

அணித் தலைவரும் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளருமான தேசமான்ய வித்தகர் விபுலமாமணி வி.ரி.சகாதேவராஜா தலைமையில் திருகோணமலை நிலாவெளி நட்சத்திர விடுதியில் நிகழ்வு நடைபெற்றது.

மட்டக்களப்பு ஆசிரியர் கலாசாலையின் 1991 - 92 புலன அணியின் திருகோணமலை தொடக்கம் திருக்கோவில் வரையிலான உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முதல் நாள் திருகோணமலை நிலா வெளியிலுள்ள இரண்டு நட்சத்திர விடுதி களில் நள்ளிரவு வரை மணி விழாக் கொண்டாட்டங்கள் நடைபெற்றன. இரண்டாம் நாள் லக்ஷ்மி நாராய ணன் ஆலயம் மற்றும் கடல் பயணத்தை மேற்கொண்டு சோபர்ஸ் தீவில் கொண்டாட்டம் இடம்பெற்றது.









குணம்ஸ் சுப்பர் மார்க்கட்
GUNAAM'S SUPER MARKET
1145 Morningside Ave Unit #33,
Scarborough, ON M1B 0A7
Contact : 416 283 9998



# மார்பகப் புற்றுநோய்!

உலகளாவிய ரீதியில் ஒவ்வொரு வருடமும் ஒக்ரோபர் மாதத்தில் மார்பக புற்றுநோய் தொடர்பான விழிப்புணர்வு மக்கள் மத்தியில் ஏற்படுத்தப்படுகின்றது. இவ்வருடம் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வுக்கான கருப்பொருள் “ஒவ்வொரு கதையும் தனித்துவமானது ஒவ்வொரு பயணமும் முக்கியமானது”என்பதாகும்.

மார்பக புற்றுநோய் என்றால் என்ன என்று பார்க்கின்ற போது மார்பகத்தில் உள்ள செல்கள் கட்டுப்பாடு இல்லாமல் வளர்ந்து கட்டியை உருவாக்குவதே மார்பக புற்றுநோய்.

இதன் வரலாறு என்று பார்க்கின்ற போது பண்டைய எகிப்து 1600 இல் இது பற்றிய சிகிச்சை முறைகள் கூறப்பட்டுள்ளது என்பதிலிருந்து இதனுடைய தாக்கம் பண்டைய காலத்தில் இருந்துவருகின்றது என்பது குறிப்பிடத்தக்கது.

மார்பக புற்று நோயை அடையாளப்படுத்தும் குறியீடாக இளஞ்சிவப்பு ரிப்பன் உலகளாவிய ரீதியில் பயன்படுத்தப்படுகிறது. இது 1990களில் சூசன் ஜி. கோமன் என்பவரால் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இளஞ்சிவப்பு ரிப்பன் மார்பக புற்றுநோய் விழிப்புணர்வின் சின்னமாகவும், மார்பக புற்றுநோய் ஆராய்ச்சியை ஆதரிப்பதற்கான நினைவூட்டலாகவும் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

சுகாதார அமைச்சின் அறிக்கையின்படி 2021 ஆம் ஆண்டை விட 50 வீதத்தால் 2022 ஆம் ஆண்டு மார்பக புற்றுநோயாளர்கள் அதிகரித்துள்ளமை இனங்க காணப்பட்டுள்ளது. 2022 ஆம் ஆண்டு 28 வீதமாகக் காணப்படுகின்றது. ஒவ்வொருவருடமும் மார்பக புற்று நோய் தொடர்பாக விழிப்புணர்வு ஏற்படுத்துவதற்கான காரணம் மார்பக புற்றுநோய் தொடர்பான விபரங்கள் தெரியாதவர்களுக்கு அவை தொடர்பான விடயங்களை தெரிந்து கொள்வதற்கான ஒரு சந்தர்ப்பத்தை ஏற்படுத்துகின்றமை,ஆரம்ப சிகிச்சையை பெற்றுக்கொள்ள முயற்சி செய்கின்றவர்களுக்கு உதவுவதாக இருக்கிறது, புற்றுநோய்க்கான அறிகுறிகளை தெரிந்து கொள்ள முடியுமாக இருத்தல், இவ்வாறான ஒரு புற்றுநோய் இருக்கின்றது என்பதை பலர் அறிந்து கொள்வதற்கும், செயற்றிட்டங்களை தொடர்ந்து செய்வதற்கும், சுகாதார பராமரிப்புகளை பெற்றுக் கொடுப்பதற்கும், சமத்துவத்தை ஊக்கிவிக்கவும், பெண்களுக்கு ஆதரவை கொடுப்பதற்கும், தைரியத்தை வழங்குவதற்கும் விழிப்புணர்வு மேற்கொள்ளப்படுகின்றது.

மார்பகம் அல்லது அக்குல் பகுதியில் கட்டி வளர்தல், மார்பகத்தின்



செ.அனுத்திரா,
ஊடக கற்கைகள் துறை,
யாழ். பல்கலைக்கழகம்.

அளவு அல்லது வடிவம் மாறுபடுதல், மார்பகத் தோல் சிவத்தல் அல்லது தடித்தல், மார்பக காம்பிலிருந்து நீர் வடிதல், காம்பில் ஏற்படுகின்ற எரிச்சல் மார்பக புற்றுநோய் அறிகுறிகளாகப் பார்க்கப்படுகின்றன.

மார்பகப் புற்றுநோய் எவ்வாறு தோன்றுகின்றது என்று பார்க்கின்ற போது உயிரணுக்கள் சரியான முறையில் இயங்குவதை நிறுத்தி கட்டுப்பாடில்லாமல் அவை வளருகின்ற போது செல்களையும் உருவாக்கி விடுகின்றன. இதனால் அதிகளவில் பாதிக்கப்படுபவர்கள் 50 வயதுக்கும் மேல் உள்ளவர்கள், ஏற்கனவே மார்பகம் அல்லது கருப்பையில் புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்கள், இரத்த உறவினர்களை கொண்டவர்கள், மற்றும் ஈஸ்ட்ரோஜர் மற்றும் புரோஜெஸ்டிரோன் ஹார்மோன்களின் வாழ்நாள் வெளிப்பாடாக அமையலாம். ஆரம்ப மாதவிடாய் 12 வயதுக்கு முன்னும் மற்றும் தாமதமான மாதவிடாய் 50 வயதுக்கு பின்னரும் ஏற்படுகின்றவர்கள், ஆரோக்கியம் அற்ற உணவு பழக்க வழக்கத்தை கொண்டவர்கள், புகைபிடித்தல் மற்றும் மது அருந்துதல் போன்ற பழக்கங்களை கொண்டவர்களை இலகுவாக பாதிக்கப்படுகின்றனர. முழுவதுமாக இவ்வாறான காரணங்களை கொண்டவர்களைப் பாதிப்பதாகக் கூறிவிட முடியாது அவ்வாறு காரணங்கள் இருந்தும் பாதிக்காத நபர்களும் உள்ளனர்.

ஆண்களும் புற்றுநோயால் பாதிக்கப்படுகின்றனர்.

மார்பக புற்றுநோய் இருக்கின்றதா என்பதை முன்கூட்டியே மெமோகிராம் பரிசோதனை மூலம் அறிந்து கொள்ள முடியும். இதில் 40 வயதுக்கு கீழ் உள்ளவர்களுக்கு அலட்ராசோனோ மெமோகிராம் பரிசோதனை செய்யப்படுகின்றது, 40 வயதுக்கு மேல் உள்ளவர்களுக்கு எக்ஸ்ரே மெமோகிராம் பரிசோதனை செய்யப்படுகின்றது.

புற்றுநோய் தொடர்பான விளக்கம் அறிவு இல்லாதவர்கள் இந்த விழிப்புணர்வின் ஊடாக மார்பக புற்றுநோய் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதுடன் தாமாகவே சுய பரிசோதனையைச் செய்து கொள்ளவும், மருத்துவர்களின் உதவியுடன் பரிசோதனை மேற்கொள்ளவும் வழி வகுக்கின்றது. மார்பகப் புற்றுநோய் நான்கு நிலைகளைக் கொண்டது. முதலாம் இரண்டாம் நிலை குணமாகக்கூடிய நிலை மூன்றாவது மார்பிலிருந்து அடுத்த உறுபபுக்குப் பரவக்கூடிய நிலை நான்காவது நிலை சிகிச்சை பெறக் கூடியது. ஆனால் கடினமான நிலையாக உள்ளது.

முன்கூட்டியே இவற்றை கண்டறிவதற்காக தேசிய புற்றுநோய் கட்டுப்பாட்டு நிகழ்ச்சித் திட்டம் (NCCP) சுகாதார பராமரிப்புகள் செய்வதற்கும் சமத்துவத்தை ஊக்கி வைக்கவும், பெண்களுக்கு ஆதரவை கொடுப்பதற்கும், தைரியத்தை வழங்குவதற்கும் இணைந்து பணியாற்றிக் கொண்டிருக்கிறது.

இது தொடர்பாக பெண்கள் ஆரோக்கிய வாழ்க்கை முறைமையங்கள், மருத்துவமனை போன்றவற்றுக்குச் சென்று பரிசோதித்துக் கொள்ளலாம். சிகிச்சைகளை எடுத்துக்கொள்ளமுடியும். நமது ஆரோக்கியத்தை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்.



# “ஒரு குடம் கண்ணீர்” நூலின் மீளறிமுகம்!

ஸ்ரீலங்கா இஸ்லாமிய எழுத்தாளர் அமைப்பின் ஏற்பாட்டில் அஷ்ரஃப் சிஹாப்தீன் எழுதிய “ஒரு குடம் கண்ணீர்” நூலின் வாசிப்பனுபவமும் மீளறிமுகமும் நாளை (02) ஞாயிற்றுக்கிழமை மாலை 3.45 மணிக்கு மடவளை மதீனா தேசிய பாடசாலை அஷ்ரப் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

கல்விப் பணிப்பாளர் எம்.எல்.எம். றாஸிக் தலைமையில் நடைபெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதமரின் மேலதிகச் செயலாளர் ஏ.பி.எம். அஷ்ரப் பிரதம அதிதியாகவும் பேராசிரியர் எம்.எஸ்.எம். அனஸ் சிறப்பதிதியாகவும் கலந்து கொள்வார்.

முதல் பிரதியை மஹஜன நிறுவனப் பணிப்பாளர் திருமதி ரஸ்வி நஸார் பெற்றுக் கொள்வார்.

வாசிப்பனுபவ உரையை கெக்கிராவ சுலைஹா நிகழ்த்த பஸ்மினா அன்ஸார் கவிதைப் பொழிவு நிகழ்த்துவார். ஏற்புரையை நூலாசிரியர் நிகழ்த்துவார்.



# மீண்டும் வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோத மண் அகழ்வு அதிகரிப்பு!

**(பூ.லின்ரன்)**

யாழ். வடமராட்சி கிழக்கு பகுதியில் பாரியளவு சட்ட விரோதமான மண் விநியோகம் இடம் பெற்றதை தொடர்ந்து ஒரு சில நாட்களுக்கு முன் நாடாளுமன்ற உறுப்பினரும் முன்னாள் வடமராட்சி கிழக்கு பிரதேச அபிவிருத்தி குழு தலைவருமான இளங்குமரன் சட்ட விரோதமாக மண் விநியோகம் இடம் பெறும் இடங்களை பார்வையிட்டு அதனை கட்டுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள தேவையான ஏற்பாடுகளை செய்வதாக கூறினார்.

ஒரு சில நாள்கள் சட்ட விரோதமாக மண் விநியோகம் இடம்பெறாமல் இருந்து, தற்போது மீண்டும் வடமராட்சி கிழக்கு பகுதியில் சட்டவிரோத மண் விநியோகம் இடம் பெற்று வருகின்றது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

வடமராட்சி கிழக்குப் பிரதேச எல்லைக்கு உட்பட்ட பகுதிகளான தாழையடி கடல் நீரை நன்னீராக்கும் சுத்தரிப்பு நிலையம் அமைந்துள்ள இடத்தின் பின்பகுதி மற்றும் குடாரப்பு பகுதி மற்றும் செம்பியன் பற்று வடக்கு பகுதி மற்றும் செம்பியன் பற்று வடக்கு மற்றும் தெற்கு பகுதியில் உள்ள இயற்கை சம நிலையை பேனுவதற்கான நிரந்தர மர நடுகை எனும் பெயரில் இராணுவத்தினரால் ஆக்கிரமிக்கப்பட்ட பெரும் வனப்பிரதேச பகுதி போன்ற இடங்களில் தற்போது பாரியளவு சட்ட விரோதமான மண் விநியோகம் இடம்பெற்று வருகின்றது.

அத்துடன் இந்தச் சட்ட விரோதமான மண் அகழ்வானது பகல் நேரத்தில் குடாரப்பு பகுதியில் இடம்பெற்று வருவதாகவும் ஏனய பிரதேசங்களில் இரவு நேரங்களில் மண் விநியோகம் இடம் பெறுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் தாழையடி பிரதேசத்தில் இடம்பெறும் சட்ட விரோதமாக மண் அகழும் இடத்தில் இருந்து மருதங்கேணி பொலிஸ் நிலையம் சுமார் ஒரு கிலோ மீற்றர் தூரத்தில் இருப்பதாகவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தற்போது குறிப்பிட்ட மண் அகழ்வு இடம்பெறும் இடங்கள் பாரியளவு நீர் தேக்கங்கள் போல் காட்சி அழிப்பதாகவும் இனி வரும் காலங்கள் மழை காலம் என்பதால் பாரியளவு உயிர் ஆபத்துக்கள் ஏற்படும் வாய்ப்புகள் உள்ள இடங்களாக மாறி உள்ளதாகவும் குறிப்பிட்ட பிரதேச மக்கள் தமது ஐயத்தினை வெளிப்படுத்தி உள்ளதோடு குறிப்பிட்ட இடத்தை அடையாளபடுத்தும் ஏற்பாடுகள் இல்லையெனில் நீர்த்தேக்கங்களை சமப்படுத்தும் நடவடிக்கைகளை செய்து தருமாறு கேட்டுள்ளனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் இளங்குமரன் இந்தச் சட்ட விரோதமான மண் அகழ்வுகளில் ஈடுபடும் மண் மாபியாக்கு எதிராகச் சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என கூறி சென்றும் இது வரை எந்த விதமான நடவடிக்கையும் மேற்கொள் ளாத காரணத்தால் மக்கள் தற்போதைய அரசில் அவநம்பிக்கை கொண்டுள்ளனர்.

தற்போது பொறுபேற்றுள்ள வடமராட்சி கிழக்கு அபிவிருத்தி குழு தலைவரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ரஜீபன், இந்தச் சட்ட விரோதமான செயற்பாடுகளில் ஈடுபடும் நபர்களுக்கு எவ்வாறான நடவடிக்கைகள் எடுக்க போகிறார் என மக்கள் பலத்த எதிர்பார்ப்புடன் உள்ளனர்.








# யாழ்ப்பாண மாவட்ட செயலகத்தில் ஊராட்சி முற்றக் கலந்துரையாடல்

(த.சுபேசன்)

வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் ஏற்பாட்டில், கிறிசலிஸ் நிறுவனத்தின் அனுசரணையுடன் யாழ்ப்பாண மாவட்ட மேலதிக அரச அதிபர் க. சிவகரன் மற்றும் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் மு.நந்தகோபன் ஆகியோரின் இணைத் தலைமையில் 2025 ஆம் ஆண்டின் இரண்டாம் காலாண்டுக்கு உரிய ஊராட்சி முற்றக்கூட்டம் அண்மையில் யாழ். மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றிருந்தது.

இதன்போது தீர்க்கப்பட முடியாத பிரச்சினைகளாக அடையாளம் காணப்பட்ட சிறுவர், பெண்கள் நலன் மற்றும் பாதுகாப்பு, கல்வி, விவசாயம், பெண்களின் சிறு கைத்தொழில் உற்பத்தி, கட்டாக்காலிகளின் தொல்லைகள், போக்குவரத்து ஆகிய விடயங்கள் தொடர்பாக ஆராயப்பட்டு சில பிரச்சினைகளுக்கு உடனடியாக தீர்வும் எட்டப்பட்டிருந்தது.



இந்தக் கலந்துரையாடலில் கிறிசலிஸ் நிறுவன வட பிராந்திய மற்றும் திட்ட முகாமையாளர் ம.பிரபாகரன், உதவி மாவட்ட செயலாளர் செல்வி உ.தர்சினி, சாவகச்சேரி பிரதேச செயலாளர் ,குடிசார் அமைப்புக்களின் சம்மேளனத்தின் தலைவர், செயலாளர் மற்றும் பிரதிநிதிகள், ஊராட்சி முற்ற அங்கத்தவர்கள், கிறிசலிஸ் நிறுவன உத்தியோகத்தர்கள் மற்றும் துறைசார் மாவட்ட உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டிருந்தனர்.



# உடுகம்பொல வீதி விபத்தில் ஒருவர் பலி!

(உடப்பு க.மகாதேவன்)

கம்பஹா பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட உடுகம்பொல வீதியில், கெஹெல்பத்தர சந்திக்கு அண்மையில் இன்று இடம் பெற்ற வீதி விபத்து ஒன்றில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

உடுகம்பொல பகுதியிலிருந்து கொட்டுகொட நோக்கிப் பயணித்த கார் ஒன்று, சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து, வீதியின் இடது பக்கமாகச் சென்ற பாதசாரி ஒருவருடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த பாதசாரி கம்பஹா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்ட நிலையில் உயிரிழந்தார் என்சப் பொலிஸ் தெரிவித்துள்ளது.

இவ்வாறு உயிரிழந்தவர் 38 வயதுடைய, உடுகம்பொல பிரதேசத்தைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார். உயிரிழந்தவரின் சடலம் கம்பஹா வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது. கம்பஹா பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# இலங்கையின் தற்போதைய வளர்ச்சிப் போக்குகள்...!

ஒரு நாட்டின் நிலைப்புக்கும் வளர்ச்சிக்கும் பொருளாதாரம், கல்வி, சுகாதாரம் போன்றன எவ்வளவு பங்கை எடுத்துக்கொள்கின்றனவோ அந்தளவுக்கு அந்த நாட்டின் பிறப்பு வீதமும் பங்கை எடுத்துக்கொள்கின்றது. குறிப்பாக ஒரு நாட்டின் பிறப்புவீதம் சரியாக அமையும்போது மாத்திரமே தொழிலாளர் வளர்ச்சி நிலை, மக்கள் வளர்ச்சி வீதம், பணி நலன்கள், வரிவருவாய் என்பன சரியான முறையில் அமைந்து நாடு வளர்ச்சிபாதை நோக்கி நகரும். கடந்த வருடங்களில் பல நாடுகளில் இந்த செல்நிலை, மாற்றங்களுக்கு உள்ளாகியிருப்பதைப் பல அறிக்கைகளின் மூலமாக அறியக் கூடியதாக இருக்கின்ற அதேவேளை அந்த பட்டியலில் இலங்கையும் அடங்கியுள்ளது என்பதே உண்மை.

இலங்கை தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தின் 2024 செப்ரெம்பர் மாத வலை அறிக்கையின் படி இலங்கை நாட்டின் பிறப்பு விகிதம் படிப்படியாக குறைந்து செல்வதை எடுத்துக்காட்டியுள்ளது. இதன்படி தொடர்ச்சியாக இந்த நிலை அதிகரித்துச் செல்லுமாயின் உருவாகக் கூடிய எதிர்கால சிக்கல்கள் மற்றும் இவ்வாறான நிலைக்கான தோற்றுவாய் யாது என்பன பற்றிய அறிவு நமக்கு இருக்கவேண்டியது அவசியமாகும்.

அறிக்கையின் படி இலங்கையில் 2018 ஆம் ஆண்டில் 3,28,000 ஆக இருந்த பிறப்பு விகிதம் 2024 இல் 228,091 ஆக குறைவடைந்துள்ளது. இது மொத்தப் பிறப்பு வீதத்தில் 33 சதவீத வீழ்ச்சியாகும். இவ்வாறு தொடர்ந்து ஒரு நிலைப்பு இருக்குமாயின் அது நாட்டினை அழிவு நிலைக்கு கொண்டு செல்ல ஒரு வாய்ப்பாக மாறிவிடும்.குறிப்பாக இலங்கையின் பொருளாதார நெருக்கடிகள்,வாழ்க்கை முறை மாற்றம்,பெண்களின் தொழில் மற்றும் கல்வி முன்னேற்றம், வெளிநாட்டு இடம்பெயர்ச்சிகள், சமூக மாற்றங்கள், கொவிட் தொற்று நோய் நிலைமைகள் போன்றவை இந்த நிலைமைக்கு ஆரம்ப வித்திட்டன.

இவற்றை விரிவாக ஆராயுமிடத்து இலங்கை 2022 காலப் பகுதியில் அரசியல் சூழ்ச்சிகளால் ஏற்பட்ட போராட்டங்கள் என்பன தொடர்ந்து நாட்டின் நிலைப்புத் தன்மையை கேள்விக்கு உள்ளாக்கியதோடு பொருளாதார ரீதியில் பாரிய சிக்கல் நிலையை ஏற்படுத்தியது. குறிப்பாக நெருக்கடி நிலையை தொடர்ந்து எரிபொருள் விலையுயர்வு, உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துப் பொருள்களின் விலை போன்றன வற்றின் தாக்கத்தின் விளைவும் குழந்தை பிறப்பு வீதத்தில் தாக்கம் செலுத்துகின்றன என அறிக்கைகள் குறிப்பிடுகின்றன.

அதாவது இவ்வாறான சந்தர்ப்பத்தில் இலங்கையின் ஒரு நடுத்தரக் குடும்பம் குழந்தை பெற்று வளர்க்க முன்வராது. அதேநேரம் இக்காலங்களில் ஏற்பட்ட வேலை இழப்புக்கள் குறிப்பாகக் கொவிட் தொற்றுக் காலப் பகுதியில் பலரது வேலையும் பறிபோனது எனவே இவ்வாறான சந்தர்ப்பங்கள் மற்றும் ஒரு குழந்தையை பெற்று வளர்க்க முடியாத நிலை என்பன 2023-2024 காலப் பகுதிகளில் பிறப்பு வீதம் குறைவதற்கு முதன்மை காரணிகளாக தொழிற்பட்டன.

இதனைத்தாண்டிய காரணங்கள் எனப் பார்த்தோமானால் இலங்கையின் குழந்தை பிறப்பு வீதத்தில் தாக்கம் செலுத்தும் மற்றொரு காரணியாக பெண்களின் தொழில் மற்றும் கல்வி முன்னேற்றத்தையும் வெளிநாட்டு இடம்பெயர்ச்சிகளையும் குறிப்பிடமுடியும். இலங்கையின் ஒட்டுமொத்த சனத்தொகையில் 51 வீதம் பெண்களாவர். இதன்படி நடைமுறை இலங்கையின் பெண்களின் கல்வி ரீதியான வளர்ச்சி மற்றும் தொழில் ரீதியான வளர்ச்சி என்பன தொடர்ச்சியாக அவர்களை ஒரு வளர்ச்சிநிலை ரீதியான ஒரு உந்துதலை வழங்குவதால் திருமணங்கள், குழந்தை என்ற நிலைப்பாட்டுக்கு வருவது குறைவாகவே உள்ளது. அதே போன்று வேலைவாய்ப்புக்கள் மற்றும் உயர்கல்வி நோக்கில் வெளிநாடு செல்லும் நபர்களின் நிலையும் அதிகரிப்பதால் திருமணங்கள் மற்றும் குழந்தை பிறப்பதில் தாமதம் போன்றவை ஏற்படுகின்றன.

மேற்குறிப்பிட்ட இந்த காரணங்கள் துணை காரணிகளாக இருந்தாலும் முதன்மை காரணிகளாக பொருளாதார நெருக்கடி நிலையே காணப்படுகின்றது. குறிப்பாக பொருளாதார நெருக்கடியின் போது மற்றும் கொவிட் தொற்றுக் காலப் பகுதியில் உண்டான வேலையிழப்புக்கள் மற்றும் பணப்பற்றாக்குறை என்பன நடைமுறையில் பொருளாதாரத்தின் அடிப்படையில் வளமான குடும்பத்தை உருவாக்க முட்டுக்கட்டைகளாகவே நின்றன. இந்த நிலைப்பாட்டில் இலங்கை ஏனைய நாடுகளிடம் வாங்கிய கடன்கள் மற்றும் பொருள்களின் விலையின் ஸ்திரமற்ற நிலை என்பன தொடர்ச்சியாக குழந்தை பிறப்பு வீதத்தில் அதிகளவு தாக்கத்தைச் செலுத்தின. ஏனெனில் மாதாந்த வருமானம் பெறும் நடுத்தர குடும்பம் ஒன்று இந்த நிலைப்பாட்டில் இன்னுமொரு குழந்தை பெற எண்ணாது.

ஆனால் இந்த நிலைப்பாடு தொடர்ச்சியாக நாட்டில் இருக்குமானால் வரப்போகும் விளைவுகள் பற்றி அறியவேண்டிய தேவை நமக்கிருக்கின்றது. இவ்வாறான நிலை தொடர்ச்சியாக இருந்தால் இன்னும் 15 வருடங்களில் 25 வீதம் 60வயதுக்கு மேற்பட்ட நபர்கள் இருப்பார்கள் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன. அதுமாத்திரமல்லாமல் தொழிலாளர் பற்றாக்குறை, கல்வி மற்றும் பொருளாதார நிலை வீழ்ச்சிகள் என்பன தொடர்ந்து அதிகரித்த வண்ணம் இருக்கும். இவ்வாறான தன்மையானது சர்வதேச ரீதியில் இலங்கையினை சனத்தொகை குறைந்த விதத்தில் காட்டுவதோடு இங்கும் முதியோர் சமூகம் ஒன்று உருவாக வாய்ப்பாக அமையும். இவ்வாறு அமையுமானால் தொடர்ச்சியான வளர்ச்சி நிலை தடைப்பட்டுப் போகும்.

இதனை முன்னிட்டு இலங்கை அரசும் ஏற்ற நடவடிக்கைகள் முன்னெடுத்த வண்ணமே உள்ளது. குறிப்பாக பொருளாதாரச் சுமையைக் குறைக்கக் கடன் திட்டங்கள் மூலம் நாட்டில் வளங்களை உருவாக்கல், தொழில் வாய்ப்புக்களை அதிகரித்தல், 2025 வரவு – செலவு திட்டத்தில் இதற்கு முன்னதான செயற்பாடுகளுடன் ஒப்பீடுகளை மேற்கொண்டு முதியோர் ஓய்வூதிய திட்டங்களை விட இளைஞர் நலன் திட்டங்களில் அக்கறை எடுத்தல், சமூக சம நிலைகளை மேம்படுத்தல், ருசேீயு இன் பரிந்துரையின் படி குழந்தை பராமரிப்பு மற்றும் குடியேற்ற தடுப்பு என்பனவற்றில் மறுபரிசீலனை செய்தல், சம்பள உயர்வுகள் போன்றனவற்றை முன்னெடுத்து குடும்பங்களின் நடைமுறை பொருளாதார சுமையை குறைப்பதுடன் குழந்தை பிறப்பு வீதத்திலும் ஊக்குவிப்புக்களை மேற்கொள்கின்றன.

இவ்வாறான முன்னெடுப்புக்கள் இலங்கையினை ஒரு வளர்ச்சி வீதத்தில் இட்டுச் செல்லும் என்பது உறுதி. அதற்கான அடித்தளமே இப்போது இடப்பட்டிருக்கின்றது. ஆனால் அதற்கான வளங்களை நாட்டு மக்களும் சுகாதாரம் மற்றும் பொருளாதார ரீதியில் பேண வேண்டும் என்பது முக்கியமான விடயமாகும்.

**சு.சுஜேந்திரம்,**
ஊடகக் கற்கைகள் துறை,
யாழ்.பல்கலைக்கழகம்.



# சுற்றுலாவிகளை இழுக்கும் திருகோணமலை சோபஸ்தீவு !

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் குறிப்பாக திருகோணமலை நகரில் நடுக்கடலில் அமையப்பெற்ற சோபர்ஸ் தீவு சுற்றுலாவிகளை சுண்டி இழுத்து வருகின்றது.

திருகோணமலையில் நிலாவெளி, பளிங்கு கடற்கரை, கன்னியா வெந்நீர் ஊற்று, திருக்கோணேஸ்வரர் ஆலயம் என்று பல சுற்றுலா தளங்கள் இருக்கின்றன .

அதில் கடற்படையினரின் பூரண கட்டுப்பாட்டில் திருமலை நகரில் உள்ள கடலில் நடுவே உள்ள சோபஸ் தீவு முக்கிய இடம் பிடிக்கின்றது. முன்பு இங்கு பொதுமக்கள் செல்ல அனுமதி இல்லை.

அண்மை காலமாக அங்கு தினமும் நூற்றுக்கணக்கான சுற்றுலாவிகள் கடல் படகு பயணத்தை மேற்கொண்டு அந்தத் தீவுக்குச் சென்று வருகின்றார்கள்.

திருகோணமலை கடற்பரப்பில் மொத்தமாக 12 தீவுகள் இருக்கின்றன. அதில் மிகப் பெரிய தீவு இந்த சோபர்ஸ் தீவாகும்.

ஆதிரேலியாவுக்கு அடுத்ததாக உள்ள ஒரு பெரும் தீவு . இந்த சோபர்ஸ் தீவு 175 ஏக்கர் நிலப்பரப்பை கொண்டது.

பிரிட்டிஷ் நாட்டு இளம் வீரர் 1672 இல் இங்கு உயிர்த்தியாகம் செய்தவர். அவரது பெயர் இந்தத்தீவுக்கு இடப்பட்டிருக்கிறது.

கடல் மட்டத்திலிருந்து 200 மீற்றர் உயரத்தில் இந்த தீவு அமைந்துள்ளது. இங்கு ராணுவ தளபாடங்கள் களஞ்சிய அறை கல்லறைகள் பாரிய போர் தளபாடங்கள் அமைந்துள்ளன.

அங்கு ஒல்லாந்தர், போத்துக்கீசர், ஆங்கிலேயர் காலத்து இராணுவத் தளங்கள் இன்றும் பழமை குன்றாமல் பேணப்பட்டு வருகின்றது .

சிறந்த உணவகம் அங்கே காணப்படுகின்றது. சுற்றுலாவிகள் சுவையான உணவுகளை இங்கு பெறலாம். அங்கு மலை உச்சியில் ஏறி நின்று பார்க்கும் போது முழு திருமலை நகரத்தையும் பார்க்கலாம்.

இவ்வாண்டில் இதுவரை இலங்கைக்கு 18 லட்சத்து 78 ஆயிரம் சுற்றுலாவிகள் இங்கு வருகை தந்திருக்கின்றார்கள்.











# மாவடிப்பள்ளி வெள்ள அனர்த்தத்தால் உயிரிழந்த மாணவர் தொடர்பில் வழக்கு!

### அரச அதிகாரிகளுக்கு எதிராக சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தில் தாக்கல்

**(நூருல் ஹுதா உமர் )**

அம்பாறை மாவட்ட காரைதீவு பிரதேச மாவடிப்பள்ளி வெள்ள நீரில் மதரஸா மாணவர்களை ஏற்றிவந்த உழவு இயந்திரம் தடம் புரண்டதில் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு உயிரிழந்தவர்கள் சார்பாக முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணிகள் சம்மாந்துறை நீதிமன்றில் முன்னிலையாகி வகை சொல்ல வேண்டிய அரச அதிகாரிகளுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்திருந்தனர்.

நேற்று (31) சம்மாந்துறை நீதிவான் நீதிமன்றத்தின் நீதிபதி ஜே.பி.ஏ.ரஞ்சித் குமார் முன்னிலையில் வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டது.

இதன்போது முறைப்பாட்டாளர் சார்பில் சட்டத்தரணிகளான சப்றாஸ் சரீப் மற்றும் எம்.வை. அன்வர் சியாத் ஆகியோர் முன் னிலையாகினர்.

குறித்த வழக்கில் பொலிஸ்மா அதிபர் சார்பில் தாக்கல் செய்யப்பட்டிருந்த அறிக்கையில் சாட்சிகளின் வாக்கு மூலங்களில் உள்ள முரண்பாடுகளைச் சுட்டிக் காட்டிய சட்டத்தரணிகள் முன்வைத்திருந்ததோடு இந்த வழக்கில் அரச அதிகாரிகள் எவ்வாறு அசமந்தமாகச் செயற்பட்டிருந்தனர் என்பதையும் மன்றுக்கு விளக்கினர்.

இதனை ஏற்றுக்கொண்ட மன்று, இந்த அனர்த்த சம்பவத்தில் பொறுப்பு வாய்ந்த அரச அதிகாரிகள் ஆகக் குறைந்தபட்ச கவனத்தையாவது எடுத்திருக்க வேண்டும் என்று தெரிவித்தது. இந்தச் சம்பவம் தொடர்பில் முழுமையான புலன் விசாரணை அறிக்கையை ஆராய்ந்து எதிர்வரும் 28 ஆம் திகதி மன்றில் சமர்ப்பிக்க உத்தரவிடப்பட்டது.







# புத்தளத்தில் நினைவேந்தல் ஒன்று கூடல்!

**(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)**

1990 ஆம் ஆண்டில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டோரின் சங்கத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட கருப்பு ஒக்ரோபர் நினைவேந்தல் நிகழ்வு புத்தளத்தில் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

இந்த நிகழ்வை 1990 ஆம் ஆண்டில் பலவந்தமாக வெளியேற்றப்பட்டோரின் சங்கம் (Forcibly Evicted Association – 1990) ஏற்பாடு செய்தது. பலவந்தமாக வெளியேற்றப்பட்டு 35 ஆண்டுகள் நிறைவடைந்துள்ள நிலையில் இந்த நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

நிகழ்வில் வெளியேற்றப்பட்ட குடும்பத்தினர், சமூகத் தலைவர்கள் மற்றும் இளைஞர்கள் பங்கேற்று, தங்களது நில உரிமைகள், மீள்குடியேற்றம் மற்றும் வாழ்வாதார உரிமைகளுக்கான கோரிக்கைகளை வலியுறுத்தினர்.

இதன்போது பேச்சாளர்கள், பல தசாப்தங்களாக நீடித்து வரும் இந்த அநீதிக்கு விரைவான தீர்வை அரசிடம் கோரினர். இந்நிகழ்வில் “எங்கள் வீடுகள், எங்கள் நிலங்கள், எங்கள் உரிமைகள்” என்ற வாசகம் ஒலித்தது. நிகழ்வின் முடிவில் அமைதி, நீதி மற்றும் நல்லிணக்கத்துக்காகப் பிரார்த்தனை செய்யப்பட்டது.

# விரதமும் விழாவும் தருகிற படிப்பினை எங்கட சந்ததி எப்பவும் நினைப்பினை!

அடியேய் பிள்ளை பூரணை
அடிவளவில திரியிறது ஆரணை?
அடிக்கடி கோழிக்கூட்டைப் பாரணை!

உன்ரை உடன்பிறந்த கொண்ணனை
என்ரை மச்சினன் சரவணை
ஆறுமுகன் கடும் பக்தனாய்
ஆறுநாளாத் கள்ளுத் தவறணை
அண்டாத அந்த மனுசனை
அண்டியது புதுப் பிரச்சினை

எங்கட சேவல் இரணையில்
எப்பவும் சரியான கண்ணனை
விரதகாரன் எண்ட தோரணை
விடிஞ்சாப் புதன் போச்சனை
முடிஞ்சா கந்தசட்டிப் பாறனை
முடிப்பான் சாவலைப் பாரணை
மனத்துள் இருக்கிற சூரனை
கூர்மதியால் கொல்லும் வேலனை
துதிப்பாய் தினமும் தாளினை
உடலைச் சீராக்கும் வடிவினை
உளத்தை நெறிப்படுத்தும் வழியினை
தருகிற விரதங்கள் தானனை
அறநெறி தரும் படிப்பினை.

-மகேசன் கஜேந்திரன்.



## புத்தளம், செம்புகுளிய குளத்தில்

# செயலிழந்த மதகை பழுதுபார்த்த கடற்படையின் சுழியோடிகள்!

(கற்பிட்டி எம் எச் எம் சியாஜ்)

புத்தளம், மஹகும்புக்கடவல, செம்புக் குளிய குளத்தின் செயலிழந்த மதகை பழுதுபார்த்து புனரமைப்பதற்காக கடற்ப டையினரின் சுழியோடிகள் உதவியை வழங்கியுள்ளனர்.

செம்புகுளிய குளத்தில் பழுதடைந்த மதகை ஆய்வு செய்து சரிசெய்ய கடற் படை சுழியோடிகளிடம் உதவி கோரிய தற்கு கடற்படை உடனடியாக பதிலளித்து உதவியது. மேலும் வடமேற்கு கடற்படை கட்டளையில் இருந்து ஒரு சுழியோடிகுழு உதவுவதற்காக அனுப்பப்பட்டது.

அதன்படி, வடமேற்குக் கடற்படை கட்டளைத் தளபதியின் மேற்பார்வையின் கீழ் இயக்கப்பட்ட, கடற்படை சுழியோடி குழுவின் மூலம் பாழடைந்த மதகு வாயில் மிகுந்த முயற்சியால் வெற்றிகரமாக புனரமைக்கப்பட்டது.









# சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் நேற்று ஞானச்சுடர் மலர் வெளியீடு

சந்நிதியான் ஆச்சிரம வாராந்த நிகழ்வில் நேற்று ஞானச்சுடர் மலர் வெளியீடு இடம்பெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில், ஆச்சிரம முதல்வர் சாதனைத் தமிழன் கலாநிதி மோகனதாஸ் சுவாமிகள் தலைமையில் நிகழ்வு இடம்பெற்றது.

நேற்று (31) வெள்ளிக்கிழமை இடம்பெற்ற இந்த நிகழ்வில் ஞானச்சுடர் ஐப்பசி மாத 334 ஆவது மலர் வெளியிடப்பட்டது.

வெளியீட்டுரையை ஆசிரியர் துரை கணேசமூர்த்தியும், மதிப்பீட்டுரையை சைவப்புலவர் செ.கந்தசத்தியதாசனும் நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து சிறப்பு பிரதிகளும் வழங்கப்பட்டன.










# கரூரில் 2 ஆவது நாளாக சி.பி.ஐ. அதிகாரிகள் ஆய்வு: போக்குவரத்து முடங்கியதால் பொதுமக்களுக்கு சிரமம்

கரூர் வேலுச்சாமிபுரத்தில் இன்று காலை இரண்டாவது நாளாக சி.பி.ஐ. அதிகாரிகள் 3டி ஸ்கேனர் உதவியுடன் காலை 7 மணி முதல் ஆய்வு மேற் கொண்டனர்.

ஆய்வு நடைபெறும் இடம் இடம் கரூர் ஈரோடு வீதி என்பதால் அப்பகுதியில் இருந்து பணிக்கு செல்லும் பொது மக் களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகை யில் தடுப்பு வேலி அமைத்திருந்தனர். இதனால் மக்கள் பொலிஸாருடனும், சி.பி.ஐ. அதிகாரிகளுடனும் கடும் வாக்கு வாதத்தில் ஈடுபட்டனர்.

கரூர் வேலுசாமிபுரத்தில் கடந்த செப் ரெம்பர் மாதம் 27 ஆம் திகதி நடை பெற்ற த.வெ.க. பிரச்சார கூட்ட நெரிசலில் சிக்கி 41 பேர் உயிரிழந்தனர். 110 பேர் காய மடைந்தனர். இந்தச் சம்பவம் தொடர்பாக கரூர் நகர பொலிஸ் ஆய்வாளர் மணி வண்ணன் அளித்த புகாரின் பேரில் த.வெ.க. பொதுச் செயலாளர் புஸ்ஸி ஆனந்த், இணைச் செயலாளர் நிர்மல் குமார், மேற்கு மாவட்ட செயலாளர் மதியழகன் உள்ளிட்டோர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டது.

உச்ச நீதிமன்ற உத்தரவின்படி இந்த வழக்கின் விசாரணை சி.பி.ஐ. வசம் ஒப்படைக்கப்பட்டது. இதையடுத்து குஜராத்தை சேர்ந்த மாவட்ட பொலிஸ் கண்காணிப்பாளர் பிரவீன் குமார் தலை மையிலான சி.பி.ஐ. அதிகாரிகள் கடந்த மாதம் 17 ஆம் திகதி முதல் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர். இந்நிலை யில் நேற்று வெள்ளிக்கிழமை காலை சி.பி.ஐ. அதிகாரிகள் வேலுச்சாமி புறத் தைச் சேர்ந்த கடைகளின் உரிமையா ளர்கள் மற்றும் பொதுமக்களிடம் விசா ரணை மேற்கொண்டனர்.

மேலும்அப்பகுதியில்வியாபாரிகள்மற் றும் பொதுமக்களிடம் சம்பவம் குறித்து விசாரணை மேற்கொண்டனர்.

தொடர்ந்து இரண்டாவது நாளாக இன்று சனிக்கிழமை காலை 7 மணிக்கு சி.பி.ஐ. அதிகாரிகள் வேலுச்சாமி புரத் திற்கு சென்று ஆய்வுகள் மேற்கொண டனர்.

சி.பி.ஐ. அதிகாரிகள் சம்பவம் நடை பெற்ற இடத்தினை 3டி ஸ்கேனர் லேசர் கருவியுடன் அளவீடு செய்யும் பணிக ளில் ஈடுபட்டனர்.

இந்நிலையில் சி.பி.ஐ. அதிகாரிகள் பணிகள் மேற்கொள்ளும் இடம் கரூர் ஈரோடு வீதி என்பதால் அப்பகுதியில் இருந்து பணிக்கு செல்லும் பொது மக்களுக்கு இடையூறு ஏற்படுத்தும் வகையில் தடுப்பு வேலி அமைத்திருந்த னர்.

இதனால் அலுவலகங்கள் மற்றும் வேலைக்கு விரைவில் செல்ல முடியாமல் பொதுமக்கள் அவதிப்பட்டதால் தடுப்பு வேலியை அகற்றுமாறு சி.பி.ஐ. அதிகாரி கள், பொலிஸாருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து அங்கு பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் அவர் களை சமாதானம் செய்து மாற்று வழி யாக கோவை வீதிக்கு அனுப்பி வைத் தனர். இதனால் அங்கு சிறிது நேரம் பர பரப்பு ஏற்பட்டது.

# இந்தியா - சீனா எல்லையில் கடும் பனிப்பொழிவு பதிவு




இந்தியா, சீனா எல்லையை அண்மித்து அமைந்துள்ள நாதுலா கணவாய், குபுப், சோம்கோ ஏரி உள்ளிட்ட பகுதி களில் அதிகாலையில் கடும் பனிப் பொழிவு பதிவாகி உள்ளதாக இந்திய ஊடகங்கள் தெரிவித்துள்ளன.

இதனால் சிக்கிம் மாநிலத்தில் வெப்பநிலை குறைந் துள்ளது.

உயரமான சில மலைப் பகுதியில் வெப்பநிலை பூச்சியம் டிகிரிக்கும் கீழே சென்றுள்ளது. இதனால் வாகனப் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது. அடுத்த 24 மணி நேரத்துக்கு மிகவும் மோசமான வானிலை தொடரும். இதையடுத்து சிக்கிம் மாநிலத்துக்கு சிவப்பு எச்சரிக்கை விடுக்கப்படுகிறது.

இத்தகவலை இந்திய வானிலை ஆய்வு மையம் வெளியிட்டுள்ளது.

# இளவரசர் அன்றூவின் பட்டம் பறிக்கப்பட்டும் மாளிகையை விட்டு வெளியேறுவதில் தாமதம்




பட்டம் பறிக்கப்பட்டு மாளிகையிலிருந்து வெளியேறுமாறு அறிவிக்கப்பட்டபோதும், பிரித்தானிய முன்னாள் இளவரசர் அன்றூ மவுண்ட்பேட்டன் வின்ட்சர் உடனடியாக ரோயல் லொட்ஜை மாளிகையை விட்டு வெளியேற வேண்டியதில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் புத்தாண்டு பிற்பகுதியில் அவர் சாண்ட்ரிங்ஹாமிற்கு குடிபெயரலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

முன்னதாக, கடந்த வியாழக்கிழமை, மன்னர் சார்ளஸ் தனது தம்பியின் பட்டங்களையும் கௌரவங்களையும் பறித்து, அவரை தனது விண்ட்சர் மாளிகையிலிருந்து வெளியேற்ற நடவடிக்கை எடுத்தார்.

எனினும் குடிபெயரல் தற்போதைக்கு இடம்பெறாது என்று சர்வதேச செய்திகள் கூறுகின்றன.

பாலியல் குற்றச்சாட்டுத் தொடர்பில் அன்றூவின் தனிப்பட்ட வாழ்க்கை மீதான பல மாத அழுத்தங்களுக்குப் பிறகு இந்த உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

சிறுவர் பாலியல் குற்றவாளி நிதியாளர் ஜெஃப்ரி எப்ஸ்டீனுடனான அவரது உறவுகள் அரச குடும்பத்தைத் தொடர்ந்து கவலையடையச் செய்தன.

எனினும் தாம் தவறு செய்யவில்லை என்று அன்றூ மறுத்து தெரிவித்து வருகிறார்.






# இஸ்ரேல் – ஹமாஸ் போர்நிறுத்தத்தில் முன்னேற்றம் 30 பாலஸ்தீனியர்களின் உடலங்கள் ஒப்படைப்பு

இஸ்ரேல் – ஹமாஸ் போர்நிறுத்த ஒப்பந்தம் முன்னேறி வருவதற்கான அறிகுறியாக, கடந்த சில நாள்களுக்கு முன்னர் இரண்டு பணயக்கைதிகளின் உடலங்களை காசாவில் உள்ள சுகாதார அதிகாரிகளிடம் ஒப்படைத்தனர்.

இந்த நிலையில், நேற்றைய தினம் இஸ்ரேல், காசாவில் உள்ள சுகாதார அதிகாரிகளிடம் 30 பாலஸ்தீனியர்களின் உடலங்களை ஒப்படைத்துள்ளதாக சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

செஞ்சிலுவைச் சங்கம் இடைத்தரகராகச் செயல்பட்டு இந்த உடலங்கள் மாற்றப்பட்டுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

பாலஸ்தீனியர்களின் உடலங்கள் திருப்பி அனுப்பப்பட்டதை தெற்கு நகரமான கான் யூனிஸில் உள்ள நாசர் மருத்துவமனையின் மருத்துவர் உறுதிப்படுத்தினார். இருப்பினும், மரபணு கருவிகள் கிடைக்காததால் உடல்களை



அடையாளம் காணுவதில் சிரமங்கள் காணப்படுவதாக சுகாதார அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

அதன்படி நேற்றைய தினம் திருப்பியனுப்பட்ட பாலஸ்தீனர்களின் உடலங்களுடன் சேர்த்து இதுவரை 225 உடலங்கள் திருப்பியனுப்பப்பட்டுள்ளன.

அவற்றில் 75 உடலங்கள் மட்டுமே குடும்பங்களால் அடையாளம் காணப்பட்டுள்ளதாக காசாவின் சுகாதார அமைச்சகம் தெரிவித்துள்ளது.

திருப்பி அனுப்பப்பட்டவர்கள் கடந்த 2023 ஆம் ஆண்டு ஒக்டோபர் 7 அன்று போரைத் தூண்டிய தாக்குதலின் போது இஸ்ரேலில் கொல்லப்பட்டார்களா?, இஸ்ரேலிய காவலில் கைதிகளாக இறந்தார்களா? அல்லது போரின் போது துருப்புக்களால் காசாவில் இருந்து மீட்கப்பட்டார்களா? என்பது தொடர்பில் தகவல்கள் எதுவும் கிடைக்கவில்லை என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

பக்கங்கள் - 2


கனடா முரசு

சனிக்கிழமை 01/11/2025

**கனடாவில் இந்திய இளைஞருக்கு 25 ஆண்டுகள் சிறைத் தண்டனை**



கடந்த 2022ஆம் C2 ▶





# 2017 இற்குப் பின்னர் முதல் முறையாக சீனா - கனடா ஜனாதிபதிகள் சந்தித்தனர்

கடந்த 2017 ஆம் ஆண்டுக்கு பிறகு முதல் முறையாக சீன மற்றும் கனேடிய ஜனாதிபதிகள் சந்தித்துள்ளனர்.

தென் கொரியாவில்நேற்று வெள்ளிக் கிழமை நடைபெற்ற APEC மாநாட்டின் போது, சீன ஜனாதிபதி ஜி ஜின்பிங் மற்றும் கனடா பிரதமர் மார்க் கார்னி ஆகியோர் அதிகாரப்பூர்வ சந்திப்பை நடத்தியுள்ளனர்.

கடந்த சில ஆண்டுகளாக இரு நாடுகளுக்கிடையே உறவுகள் கடுமையாக பாதிக்கப்பட்டிருந்த நிலையில், இந்த சந்திப்பு முக்கிய முன்னேற்றமாகக் கருதப்படுகிறது. C2 ▶

# கனடாவில் முக்கிய அரச துறைகளில் சைபர் தாக்குதல் எச்சரிக்கை விடுப்பு



கனடாவின் நீர், விவசாயம் மற்றும் சக்திவளத்துறைகளின் மீது சைபர் தாக்குதல்கள் நடத்தப்படக்கூடிய அபாயம் காணப்படுவதாக எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

கனேடிய இணைய பாதுகாப்பு மையம் இந்த எச்சரிக்கையை விடுத்துள்ளது.

இணைய ஊடுருவல்கள் ஊடாக இந்த சைபர் தாக்குதலை மேற்கொள்ள முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்றன என தெரிவிக்கப்படுகிறது.

கடந்த சில வாரங்களில் இணையத்தின் மூலம் அணுகக்கூடிய கட்டுப்பாட்டு அமைப்புகள் மீது பல தாக்குதல்கள் இடம்பெற்றுள்ளன என தெரிவிக்கப்படுகின்றது.

எனவே இது குறித்து கவனமாகவும் அவதானத்துடனும் இருக்குமாறு பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.



# நைஜர் செல்வதை தவிர்க்குமாறு கனடா மக்களுக்கு எச்சரிக்கை

கனடா, அமெரிக்கா மற்றும் பிரித்தானியா ஆகிய நாட்டு பிரஜைகள், நைஜர் நாட்டிற்குப் பயணிப்பதை தவிர்க்க வேண்டும் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

நைஜரில் நிலவும் அரசியல் மற்றும் தீவிரவாதம், கடத்தல் நிலைமை காரணமாக இந்த எச்சரிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

அந்தவகையில் அமெரிக்க வெளியுறவுத்துறை, நைஜரில் உள்ள தனது தூதரகத்தின் ஆதரவைப் பெற முடியாது எனவும், அவசர சூழ்நிலைகளில் அமெரிக்கா மீது நம்பிக்கை வைக்க வேண்டாம் எனவும் அறிவித்தது.

அந்தநாட்டில்உள்ளஅமெரிக்கபிரஜைகள் தங்களுக்குத் தேவையான பாதுகாப்பு ஏற்பாடுகளை முன்கூட்டியே திட்டமிட வேண்டும் என்பதைக் குறிக்கிறது.

கனடா மற்றும் பிரித்தானியா ஆகியவை தங்களது குடிமக்களுக்கு அதிக அபாயம் உள்ள நாடு என நைஜரை வகைப்படுத்தி, அவசர தேவையின்றி பயணிக்க வேண்டாம் என அறிவுறுத்தியுள்ளன.

இந்த எச்சரிக்கைகள், நைஜரின் தற்போதைய பாதுகாப்பு சூழ்நிலையை பிரதிபலிக்கின்றன.

அதேவேளை நையர் செல்லும் பயணிகள், தனிப்பட்ட பாதுகாப்பு ஏற்பாடுகளை உறுதி செய்து, அரசாங்க அறிவுறுத்தல்களை பின்பற்ற வேண்டும் எனவும் குறிப்பிட்டுள்ளது.

## 2017 இற்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2018 இல், ஹுவாவே நிறுவனத்தின் உயர் அதிகாரி மெங் வான்சூவை கனடா, அமெரிக்காவின் கோரிக்கையின் பேரில் கைது செய்தது.

இதற்கு பதிலாக சீனா, இரு கனடா பிரஜைகளை உளவியல் குற்றச்சாட்டில் கைது செய்தது. இதனால் இரு நாடுகளுக்கிடையே உறவுகள் பாதிக்கப்பட்டிருந்தன.


2025 இல், கனடா சீனாவில் தயாரிக்கப்பட்ட எக்கு (Steel) பொருள்களுக்கு 25 சதவீதம் வரி விதித்தது.

பதிலாக சீனா, கனடா கனோலா எண்ணெய் இறக்குமதிக்கு 75.8 சதவீதம் தற்காலிக வரி விதித்தது. இது இரு நாடுகளின் வர்த்தக உறவுகளை மேலும் பாதித்தது.

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் சீனாவுடன் சில வர்த்தக வரிகளை குறைத்தாலும், கனடாவுடன் அனைத்து வர்த்தக பேச்சுவார்த்தைகளையும் நிறுத்தி, கூடுதல் 10 சதவீதம் வரி விதித்துள்ளார்.

இந்த நிலையில், சீன மற்றும் கனேடிய ஜனாதிபதிகள் நேற்று வெள்ளிக் கிழமை சந்தித்துள்ளனர்.

இந்த சந்திப்பு, ஆசிய மற்றும் உலக அரசியல் சூழ்நிலைகளில் முக்கிய மாற்றங்களை ஏற்படுத்தக்கூடும் என தெரிவிக்கப்படுகிறது .



## கனடாவில் இந்திய...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஆண்டு கனடாவில் இடம்பெற்ற கொலை வழக்கில் இந்திய வம்சாவளி இளைஞருக்கு 25 ஆண்டுகள் சிறை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

கனடாவின் பிரிட்டிஷ் கொலம்பியா மாகாணத்தில் கடந்த 2022 ஆம் ஆண்டு போலேவார்ட் பல்கலைக் கழகத்தில் உள்ள கோல்ப் கிளப் மைதானத்தில் 38 வயதான விஷால் வாலியா என்பவர் துப்பாக்கியால் சுட்டு படுகொலை செய்யப்பட்டார்.

அவரை கொலை செய்த நபர்கள் அங்கிருந்து தப்பியோடியபோது ஒரு வாகனத்திற்கு தீவைத்துவிட்டுச் சென்றனர்.

இந்த சம்பவம் தொடர்பாக விசாரணை நடத்திய பொலிஸார், கொலையாளிகளான இக்பால் காங்க் (வயது 24), டீன்ரே பாப்டிஸ்ட்(வயது 21) மற்றும் பல்ராஜ் பஸ்ரா (வயது 25) ஆகிய 3 பேரை அதிரடியாக கைது செய்தனர்.

இந்த வழக்கு தொடர்பான விசாரணை நீதிமன்றில் நடைபெற்று வந்தது. இதில் இக்பால் காங்க் மற்றும் டீன்ரே பாப்டிஸ்ட் ஆகிய இருவரும் தங்கள் குற்றத்தை ஒப்புக்கொண்டனர்.

அதனை தொடர்ந்து இக்பால் காங்கிற்கு 17 ஆண்டுகள் சிறை தண்டனையும், வானகத்திற்கு தீ வைத்த குற்றத்திற்காக கூடுதலாக 5 ஆண்டுகள் சிறை தண்டனையும் விதிக்கப்பட்டது.

மற்றொரு குற்றவாளி டீன்ரே பாப்டிஸ்டுக்கு வாழ்நாள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டது.

தொடர்ந்து இந்த வழக்கில் மூன்றாவதாக கைது செய்யப்பட்ட குற்றவாளியான இந்திய வம்சாவளி இளைஞர் பல்ராஜ் பஸ்ராவின் தண்டனை விவரங்களை பிரிட்டிஷ் கொலம்பியா கோர்ட்டு நேற்று அறிவித்தது.

அதன்படி பல்ராஜ் பஸ்ராவுக்கு 25 ஆண்டுகள் சிறை தண்டனை விதித்து நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.